அச்சிவமென்னுமழகியவீட்டை ... ... *
ஐயந்திரிவுமறவேயடைதல் ... ... *
எம்மார்க்கத்தாலென்றிடில்வேத ... *
முடிவினின்மொழியுமெய்நெறியதனில்
அடைந்திடவேண்டுமம்மார்க்கத்தின் *
ஒழுங்கைக்கேண்மினுபநிடமதனில் ... *
ஏகமேவாவத்துவிதீயம் .. ... *
பிரமமேயென்றுபேசிடுமதற்குச் ...... *
சுசாதிவிசாதிசுவகதபேதம் ... ... *
சொல்லியமூன்றுஞ்சொரூபத்தில்லை *
என்றதுவாகினெழில்வேதாந்தப் ...... *
பக்கந்தனக்குப்பகர்ந்திடும்பந்தம் ... *
வீடிவையிரண்டின்விவகாரத்துணி ... *
வெத்தகையென்னிலியம்பிடக்கேண்மின்
நித்தியமாகையினிகழ்ந்திடுகால ... *
பரிச்சேதமதும்பரிபூரணத்தும் ... *
ஆகையிற்றேசவறைபரிச்சேதமும் ... *
ஏகமதாகினியம்பிடுவத்து ... ... *
பரிச்சேதமதும்பகர்ந்திடவொண்ணு *
தறிவாய்ச்சத்தாயானந்தமதாய்ப் ... *
பந்தமுத்தியெனப்பகர்விவகார ... *
அதீதமாகியசைவறவிளங்கும் ... *
தன்னிடந்தனிலேசங்கற்பசத்தி ... *

சங்கற்பமல்லாதசங்கற்பசத்தி ... ✱
என்றிவையிரண்டுண்டிவையிற்சங்கற்ப ✱
சத்தியேதென்னிற்சாற்றிடக்கேண்மின் ✱
நினைவுரூபமதாநிகழ்ந்திடுமதற்கு... ✱
வடிவேதென்னில்வகுத்திடுநாமம் ... ✱
உருவமயமேயோரோரிடத்தில்... ✱
ஒருவன்கூவுமுறையதுதானே ... ✱
எதிரிட்டப்படியெழுவதுபோல ... ✱
நினைவதுவென்றுநிகழ்ந்திடுநாமம் ✱
உருவதுவென்றுமொருபேதமுமில் ✱
நவிற்றிடுரூபநாமமயமும் ... ✱
மாயாமயமேமாயையென்றதுதான் ✱
யாதொன்றில்லாததுமாயையாகும்... ✱
உள்ளதுமலவாயுருப்பெயர்மயமாய் ✱
நினைவுரூபமாய்நிகழ்சங்கற்ப... ✱
சத்திசத்தாயதற்சொரூபமதாம் ... ✱
அதிட்டானத்திலாரோபிதமாம் ... ✱
ஆரோபிதமுமதிட்டானமின்றி ... ✱
விளங்காததுபோல்விளக்கிடுந்தன்னைத் ✱
தவிரச்சங்கற்பசத்தியுந்தோன்று ... ✱
இத்தகைதோன்றுமிருஞ்சங்கற்ப ✱
சத்திமயமாஞ்சருவங்களையும் ... ✱
சத்தாய்நிகழுந்தற்சொரூபத்தில்... ✱
ஆரோபிதமென்றறிந்தமையாது ... ✱
புறம்பெனச்சத்தியபுத்தியைப்பண்ணிப்
பார்த்திடுமிடத்தில் பாழுயர்செகமென்
றுரைத்திடப்பட்டவொருமுப்பொருளும்
விளங்கிடுமவையைவிளம்பிடக்கேண்மின்
சங்கற்பசத்திதன்மயமான ... ✱
நாமரூபமதேநாட்டிடுசெகமாம் ... ✱
அவையினைநோக்குமறிவேயுயிராம்... ✱

ஆணவயினைவிளக்குமறிவேபரமாம்... *
இத்தகையாகவியம்புறும்பொருளும் *
உதித்திடுமிந்தவுயிர்பரமிரண்டில் ... *
மேற்பாகஞ்சர்வவிலையமதாகும்... *
சிவனேவேகதேசவிலையம் *
இந்தச்சிவனிப்படிபொய்யாய்ச் ... *
சடமாய்த்தோன்றுஞ் சகத்தினுடைய *
புணர்ச்சியிற்சடமாய்ப்போதவடிவை *
விட்டுடனிச்சைவிளங்கிடுஞானக் *
கிரியையுடைத்தாய்க்கிளக்குமிவையில் *
கன்மமுண்டாய்க்கன்மந்தன்னால் *
தோற்றமுடைத்தாய்த்தோன்றுதொட்டு
செனனமரணஞ்சென்றுடன்வரும் [ச்
இத்தகைபுரியுமிச்சங்கற்ப ... *
சத்தியேபந்தந்தருஞ்சங்கற்ப *
சத்தியின்வடிவினிற்சாற்றக்கேண்மின் *
பிராந்தியிலொருவன்பிசகிமாறுகத் *
திக்குகடன்னைத்தேருமிடத்தில் ... *
சூரியனின்றுதோற்றியதிசையைக் ... *
கண்டுந்துணிவாய்க்காணுதல்கூடா... *
தையமாய்த்தோன்றுமத்தபிராந்தி... *
உன்னின்றுநீங்கினுள்ளபடியே ... *
துணிவாய்நேரோதோற்றுமதன்றி ... *
மந்தவிருளின்மறைந்திடுகயிற்றைப் ... *
பாம்புபோலப்பார்த்திடுமிடத்தில் ... *
பாம்பலவென்றும்பழுதையேயென்றும்
ஆறதனாலேயறிந்திடும்போதும் ... ... *
துணிவதுவாகத்தோன்றுதந்த ... *
மந்தாந்தகாரமாறிடிற்றோன்றும் ... *
அஃதினைப்போலவறிந்திடுசாத்திர ... *
ஜெனனியஞானஞ்செப்புதலின்றி ... *

திருந்திருத்தியனாய்க்கிளர்சாதனங்கள் *
நான்குமுடைத்தாய்ஞானாசிரியர் ... *
அருளதினாலேயாரணமுடிவாம் ... *
மாவாக்கியத்தின்வகுத்திடுபொருளை ... *
விருப்பமதுடனேவிசாரணைபண்ணி *
இச்செகஜீவவிருபரம்மனைக் ... *
கதிட்டானமாகியவப்பரசொரூபம் ... *
தானேயென்றுதன்னுள்ளிருளை ... *
யகன்றுசமாதியென்றறைந்திடுகின்ற *
சமாதானபுத்திதானதுபிறந்து ... *
தனதுசங்கற்பசத்தியினாலே ... *
ஆரோபிதமாயனேகத்துவங்கள் ... *
விளங்கினதென்றும் விளங்கிடுமிவைக்கதி
டானந்தானேயாமெனவென்றும் ... [ட்
பழுதையிலிடத்திற் பாம்பொருகாலும்
இல்லாதனைபோலிவ்வாரோபிதம் ... *
இலையெனநீங்கியெழிலதிட்டானம் ... *
ஆய்நிற்குதலேயசங்கற்பசத்தி ... *
இதுவேமுத்தியிச்சங்கற்பம் ... *
அசங்கற்பமென்னவறைந்திடுமிவைக் *
கதிதனேதானாகையிலவையின் ... *
ஊதாம்பந்தமோங்கியமுத்தி ... ... *
இவைதனக்கீதெனென்னனுமாகும் *
இத்தகையொருவனெழிற்குருவருளில் *
ஐயந்திரிவறவறிந்துசொரூபம் ... *
தன்னுடசன்னிதானமதனில் ... *
சங்கற்பத்திற்றானுவாய் ... ... *
விரிந்ததுவென்றும் விரிந்திடுமெனவையும்
அசங்கற்பத்திலடங்கிடுமென்றும் ... *
இவையேபந்தமெழில்வீடென்றும் ... *
இவைகளிரண்டுமென்கனேர்காலும் ... *

இலையிவைவிளங்கலெம்பிடமதனில் ... ✻
ஆரோபிதமென்றறிந்தவறிவு ... ✻
கலக்கமில்லாமற்காத்திரநீங்கும் ... ✻
தன்னளவதனுந்தயிலைதாரையினில் ... ✻
நின்றிடின்முடிவினிகழ்பந்தமுத்திக் ✻
கதீதமதாகுமழகியபிரம ... ... ✻
சித்தியதனைச்சேருவனேனோ ... ... ✻

பிரமசித்தியகவல் - முற்றும்.

உ

பனிரண்டாவது

உபதேச சித்தாந்தக்கட்டளை.

ஆத்மாக்களை முத்தியிலே விடவேண்டி வாக்கு மனாதீத கோசரமாகிய அருட்சத்தி-தானே-பாசவயிராக்யமும்-சிவகாருண்ணியம்-ஈஸ்வரபக்திபிரமஞானமென்கின்ற நான்குமே ஒருதிருமேனியெனக்கொண்டருளிய- ஞானாசாரியர் இனிப்பிறவாதமுடிந்தபிறப்பில்நித்தியாநித்திய வத்துவிவேகம் - இகமுத்தாதபலபோகவிராகம்-சமையாதிசட்கமுமுமூட்சத்வமென்கின்றசாதனசதுஷ்டய சம்பத்தியே - ஓர்ருவெனக்கொண்டசற்சீடனுக்கு - அநுக்கிரகம்பண்ணுமுறையை - உலகத்தின்கண்ணேவயித்தியராயினோர்-ஒருவனதுவியாதியை- நிச்சயம்பண்ணியித்தனைதினத்தின்மேல் - அவுடதங்கொடுக்கவேணுமென்றுநியமமிருப்பினும்ஓரோர் அசாத்தியவியாதியையுடையவனுக்குக்கண்டவக்கணமே - கனமாகியபூபதிமுதலிய- அவுடதங்களைக்கொடுத்து உடனேதிருப்பவேண்டும்அதைப்போலச்சாதனங்களையுடையதீவிரதரபக்குவனுக்கும்ஓராண்டாகிலுஞ்சோதித்துஅநு

க்கிரகம்பண்ணவேணுமென்றாலும் ஒரோர் அதிதீவ
ரதரபக்குவனுக்கு அந்தக்கணமேஇந்தஉபதேசசித்
தாந்தத்தை அனுக்கிரகம்பண்ணிபவரோகத்தையுட
னேநிவிர்த்திபண்ணவேண்டும்-இந்தஉபதேசசித்தா
ந்தமார்க்கத்திலொழிந்துமற்றைய மார்க்கத்தினாலே
பவரோகநீங்காதோவென்னில்- பாதாதிகேசபரியந்
தம்-அக்கினிபற்றிக்கொண்டவனுக்கு விழுந்ததுறை
யிலே அவனைவிழுங்கிமேலிடப்பட்டமடுவிலேயன்றி
க்கொஞ்சஜலத்தில் பிரவேசிக்கில்உடனேயவிந்துமு
டியாது-அதைப்போல- அதீதபக்குவனுக்குடனே-
அவனையும்விழுங்கிமேலிடப்பட்ட அகண்டாகாரஞா
னம்-இம்மார்க்கத்திலேபிரவேசித்த - அக்கணமேயு
ண்டாம் - அதெப்படியென்னில் - சற்குருசந்நிதியி
லேசற்சீடனானவன்- தேனிரம்பியமலரைத்தேடும்அ
ளிகள்போல்பூதலமெங்குந்தேடிவெப்பந்திராமல்வ
ந்தடைந்துகண்ட அக்கணமே - உள்ளமகிழ்ச்சியை
யடைந்து தாரகமாகியசிவமே யெனக்கண்டு-அவரு
டைய அருள்சுரக்கும்படிபண்ணிக்கொண்டு (சுவாமி
நானார்இந்தநானாவாகியவுலகமேது- இதுஆராலுடை
யது - எனக்குச்செனனமரணம் வந்தவாறேது- இ
துயாதினாலேநீங்கும்- இவற்றையனுக்கிரகஞ்செய்ய
வேண்டும்- இவையிற் பிரதமத்தில்-அடியேன் நானொ
ன்றும்விண்ணப்பஞ்செய்தபடிக்குஎன்னையறிவி
த்தால்- மற்றையநாளும்அடியேனை விண்ணப்பஞ்
செய்வேனென்று சற்சீடன்நானொன்றுகேட்கஆசா
ரியானுக்கிரகம்பண்ணுகிறார்நல்லதுஉன்னைக்கரதலா
மலகம்போலக்காட்டுகிறோம், நீநன்றாகப்பார்க்கக்க
டவாயென்று திருவடியைச்சூட்டி-அஸ்தமத்தக சை
யோகம்பண்ணி கிருபாதிஷ்டியினாலே நோக்கி-பின்
கேயுண்டாய் விளங்குவதெல்லாம் - நீயேயென்னில்

சுவாமீ)யிங்கேயுண்டாய்விளங்குவதெல்லாம்நானெப்படியாவேன் ஆனாலுனக்கிங்கே- என்னபிரகாசியாநிற்குதென்னில்- (சுவாமீ) நாமரூபமயமாகியஉலகமேதோன்றுது - ஆனாலந்தஉலக மெவ்விடத்தினின்றுதோன்றுதென்னில்- (சுவாமீ) யென்னுடையநினைவிலேநின்று தோன்றுது - ஆனால் நினைவுவேறுஉலகம்வேறேயென்னில் - (சுவாமீ) உலகமெதிரிட்டுக்காண்கையினாலே வேறுதானே-ஆனால்உலகமாகியநாமரூபத்தைநீக்கி நினைவைப்பாரென்னில்-(சுவாமீ)அப்படிபார்க்குமிடத்தில்நினைவைக்காணேன்- ஆனால் நினைவைநோக்கி நாமரூபத்தைப்பாரென்னில் (சுவாமீ) அப்படி பார்க்குமிடத்தும் நாமரூபத்தைக்காணேன்-ஆனால்,நாமரூபமயமாகிய உலகமேதென்னில்(சுவாமீ) யென்னுடையநினைவுதானே-ஆனால் அந்நினைவுஎங்கேநின்றுதோன்றுதென்னில் (சுவாமீ) என்னிடத்திலேநின்றுதோன்றுது - ஆனால் நினைவுவேறு நீவேறேயென்னில் - (சுவாமீ) என்னினைவாகையினாலே-வேறின்றிநான்றானே - ஆனால் நினைவைநீக்கியுன்னைப்பாரென்னில்-(சுவாமீ)யான் பிரகாசியாநிற்கின்றேன் ஆனால் நினைவு-நீயெப்படியாவாயென்னில் (சுவாமீ) நினைவுஎன்னைவிடவேறுதானே- ஆனால் உன்னைப்பிரித்துநினைவைப்பாரென்னில்-(சுவாமீ) அப்படிபார்க்குமிடத்தில் நினைவைக்காணேன் - ஆனால்நினைவுயாதோவென்னில் - (சுவாமீ) நினைவானது நானுமல்லஎன்னைவிடவேறுமல்ல - ஆனலதெப்படியென்னில். (சுவாமீ) தங்கத்தினிடத்திலேபணியான அதுதங்கமுமல்லாமல் தங்கத்தைவிடவேறுமல்லாமல் கற்பிக்கப்பட்டதுபோலநினைவு மென்னிடத்திலேகற்பிதம்-ஆனாலிந்தநினைவு வேறெசத்தையோவென்னில், (சுவாமீ) அதற்குவேறே சத்தையில்லை - என்னுடைய சத்தையேதோன்றிவிளங்காநிற்குது-ஆனாலிங்கேதோன்

றுவதெல்லாம்- யாதென்னில். (சுவாமீ) இங்கேதோ
ன்றிவிளங்குவதெல்லாம்நானே-ஆனால்-நாமுன்னம்,
எல்லாநீயேயென்று சொன்னோமே - அதற்குனக்கு
ஐயந்தோன்றிற்றே-இப்போதுஎல்லாநானே யென்
றுநீசொன்னதுதிரிவோதன்றாய்ப்பாரென்னில்(சுவா
மீ) முதற்றிரிவினாலேஎல்லாம்நானேப்படியாவனெ
ன்றுகேட்டேன். சுவாமிகடாக்ஷத்தினாலே - திரிவுப
ண்ணிக்கொண்டிருந்த அஞ்ஞான விருள்போய்த்து
ணிவாகத்தானே - எல்லாநானேயெனக்கண்டேன்-
ஆனால்உன்னைக் கண்டஇடத்தில் அனுபவ மெப்படி
யிருந்ததென்னில்-(சுவாமீ) அகண்டாகாரமயமாய்
ச்-சுட்டிறந்தசுகாதீதமாய் பழுதையினிடத்திற்பாம்
பொருக்காலுமில்லாததுபோல்- உலகமுயிர்பரமெ
ன்பது-ஒருக்காலுமில்லாததாய்பிரகாசியாநிற்குது-
ஆனாலிதுவே தற்சொரூபமுத்தி- யிதிற்கலக்கமில்லா
மல்தேகபதனபரியந்தம் நிற்பாயாக - இதன்றி அந்
தமுத்திநீயானதுக்குக்குறி - மற்றைநாளும் - நீயுன்
னனுபவப்படிக்குச் சொல்லென்னில்- (சுவாமீ) நா
னாவிதமாகியபிரபஞ்சம் என்னிடத்திலே ஆரோபித
ம்- அதுசங்கற்பத்தையுடையது - அந்தச்சங்கற்பத்
தையுடையஆரோபிதமாகியபிரபஞ்சம் - அதிட்டா
னமாகியஎன்னைவிட வேறல்லவென்று காணாததிரிவி
னாலேஎனக்குச்சனனமரணம்-எல்லாநானேயென்ற
றிவில்செனனமரணமில்லை - இப்படிமற்றைநாளும்
சுவாமிகடாக்ஷத்தினாலேஎனக்கனுபவமாச்சுது-நல்ல
துநம்முடைய அனுபவமுமிதுவே சுருதியினுடைய
முடிவிலேசொல்லுவதுமிதுவே- உன்னுடையவனு
பவமுமிப்படியேயாகில்இதுவே- உபதேசசித்தாந்
தம் - என்றுஇதிற்கலக்கமில்லாமல் வாழ்வாயாக வெ
ன்று ஆசீர்வாதம்பண்ணினார்.

உபதேசசித்தாந்தக்கட்டளை முற்றும்.

உ

பதின்மூன்றாவது

சிவதரிசன அகவல்.

உரோமசமுனிகளுண்மகிழ்ச்சியுடன் ... *
பணிந்திடுகின்றபழங்கிரிமேய ... ... *
விருத்தவம்பிகையேவிண்ணப்பமொன்றுண் *
டுரைக்கேன்யானுமுன்செவிசாத்தி ... *
அருள்செயவேண்டுமறைநீயென்னில் ... *
கடையனேன்றனக்குங்கருணையதாக ... *
சுட்டிறந்தொளிருஞ்சுயம்பிரகாச ... *
சிவதெரிசனத்தைச்செப்பிடவேண்டும் *
நல்லதுனக்குநாமேயகவிருள் ... *
நீக்கிமுன்படியேநிலையினில்வைத்த *
வகைப்படியேநீவகுத்துரையென்னில் ... *
இருளறநீக்கியிதுவறநோக்கில் ... *
இவ்விடத்துண்டாயிலகுவதேசிவம். *
விளம்புமச்சிவத்தைவிளக்குவதேநீ ... *
நீவிளங்குஞ்சிவநின்றறிகுதல்யான் ... *
இவ்வனுபவத்திலியம்பியஞாதுரு *
ஞானநேயம்மிவைநண்ணிநிற்கையினில் ... *
சிவதெரிசனமெனச்செப்பிடலாகா *
என்றெனில்யானுரையெழிலனுபவத்தில் *
சிவம்நீயானெனச்செப்பியமூன்றும் *
உரைமாத்திரமலவையொருமுதருனே *
எப்படியோர்முதலென்றெனிற்சொல்கேன் *
சச்சிதானந்தத்தன்மயஞ்சிவமெனச் *
சாற்றுதல்போலுஞ்சாற்றுமோங்காரத் *
தடங்கிநின்றிடுமூன்றக்கரம்போலும் ... *
நீலோற்பலமெனநிகழ்த்திடல்போலும் *
கடமடமகதாகாயமெனவே ... ... *

சாற்றுதல்போலுஞ்சாற்றியவிவையில்... ✻
உரையேபின்னமுளபடிநோக்கில் ...✻
ஏகமேயாமித்தகைபோல ... ✻
நானீசிவமெனநவிற்றிடுமூன்றும் ...✻
சொன்மாத்திரமேசொரூபமதொன்றே ✻
ஒன்றேயாகியுயிர்க்கிதுவதுவென் ... ✻
றுரைத்திடப்பட்டவுருப்பெயர்மயமா ✻
மாயைதோன்றும்வகையேதென்னில் ✻
அஞ்ஞானத்தாலச்சொரூபத்தை... ✻
மறந்துயிரிதுவெனுமாயையைக்காணும் ✻
ஒருமுதலானவுயிர்க்கிருளென்றால் ✻
பரசிவமதற்கேபந்தமுண்டாகும்... ✻
மேலுமோர்சிவம்விளங்குதலிலையில் ... ✻
ஒருகாலையினுமொருவாபந்தம் ...✻
என்றெனிலந்தவெழிற்சொரூபற்குப் ✻
பந்தமுத்திபகர்ந்திடலாகா ... ✻
உன்னருளதனினுபக்கிரமத்தை ...✻
அன்றெனக்குநீயருளியவகையே... ✻
சொல்கேனந்தச்சொரூபவொளியில் ✻
கதிரொளிதோன்றுங்கானலேபோலப் ✻
பேசவொண்ணாதபின்னாசத்தி ... ✻
தோன்றிடுமதனிற்சொரூபசிற்சத்தி ✻
சாயைபதியிற்சகமுயிற்பரமென ✻
ஓர்மூப்பொருளுடனேவிளங்கும் ✻
எத்தகையென்னிலியம்பியபின்னை ✻
திரிகுணசமூகஞ்சேர்ந்துநிகழும் ✻
சத்துவகுணத்திற்சாயையேபரம் ✻
எண்ணிறந்தவிராசதகுணத்தில் ✻
சாயைகளேயுயிர்தாமதமிரண்டாம் ✻
இருண்மாயையெனவிருளுயிர்வையை ✻
மறைத்தேநிற்குமாயைசெகமாம் ✻

தனுமுதலான சகமதுண்டாகக் ❋
கணக்கதுவாகக்கன்மமுநிகழும் ❋
இத்தலையின்றுவிருஞ்சத்திதன்னில் ❋
ஐந்துபொருளுமமைந்தேநிகழும் ❋
இதிற்பந்தமுத்தியிசைத்திடலாகும் ❋
இராசதகுணத்திலிசைந்திடுசாயை ❋
ஆகியவுயிர்களகிட்டானமான ❋
தற்சொரூபத்தைத்தாமதவிருளால் ❋
மறந்துமூவகையாய்மாயையிலுழலும் ❋
சத்துவகுணபரந்தனக்கொருகாலும் ❋
இருளேயில்லாவியற்கையிலருளில் ❋
தனதங்கிசமுயிர்தானெனவறிந்து ❋
கூபத்தில்வீழ்ந்தகுழந்தையையெடுக்கத் ❋
தாயேவீழ்ந்ததகைமையின்பரமே ❋
மாயைதனிலேவந்துருவைக்கொண் ❋
டைந்தொழிலுமடைவுடனடத்தி ❋
இருவினைமாற்றியெழிலதிட்டான ❋
தற்சொரூபத்தைத்தானடைவிக்கும் ❋
இருளதுநீக்கியிருந்தவிடத்தில் ❋
உயிர்பரமிரண்டு முடலுயிர்போலப் ❋
பின்னுசத்தியிற்பெற்றிடுமுத்தி ❋
உயிர்பரமிரண்டுமொன்றேயாகி ❋
அபின்னசத்தியிலடைந்திடுமுத்தி ❋
அபின்னையைப்பார்த்தேயதுநீயென்ன ❋
அருமறையோதுமதுவறியாமல் ❋
பின்னையைப்பார்த்தேபேதவாதிகள் ❋
பாவனையென்றேபகுத்துரைசெய்வர் ❋
உயிரின்சாக்ஷியொருநானேயாம் ❋
பரத்தின்சாட்சிபரைநீயேயாம் ❋
அப்பால்விளங்குமதுசிவமேயாம் ❋
பின்னுசத்தியிற்பிறிவைக்குறித்தே ❋

இவ்வகைமூன்றாயியப்புரையன்றிப் *
பார்த்துடனோக்கிற்பரம்பொருளொன்றே *
இப்பரம்பொருளேயெழிற்சிவதரிசனம் *
என்றேமூன்றென்றியம்பியதுமையே *
சுட்டொடுநோக்கிற்றோன்றிடுமூன்றாய் *
சுட்டின்றிநோக்கிற்றோன்றிடுமொன்றாய் *
மூன்றாயிறந்தமுப்பாழதனில் *
தற்சிவசொரூபந்தானாய்விளங்கும் *
பின்னுசத்தியிற்பிறந்ததுமூன்றும் *
பின்னைதனிலே பெயர்ந்தேயொடுங்கும்
அப்பால்மவுனத்தழகியசிவமே ... *
அழகியசிவத்திலாரோபிதமாய்ப் ... *
பின்னைநிகழும்பெயராதென்றும் ... *
அதிட்டானமானவச்சிவநேயம் ... *
உலகமாய்த்தோன்றிலுயிருமருளும் ... *
விளங்கிடுஞ்சிவமாய்விளங்கிடும்போதில் *
உயிருமருளுமொருசிவமேயாம் ... *
இத்தகைகண்டேனெழிற்சிவதரிசனம் *
சிவம்நயக்கருளியசிவதரிசனத்தின் ... *
படியேயுனக்குநம்பார்வையிலுண்டாய்
விளங்கிற்றந்நிலைவிட்டுநீங்காது ... *
நில்லெனவருளினிமலநாயகியே ... *
மலந்தினுநாயைவளப்பமதுடைய ... *
சிங்காதனத்திற்சேர்த்திவைத்ததுபோல்
எனக்கேநகைவருமெனதுசரித்திரம் ... *
எனக்குமித்தவெழிற்சிவதரிசனம் ... *
அளித்தனையிதற்கோரறைகைமாறென் *
பரையேயுனக்கேபாங்காவென்னைக் ... *
காத்ததுகாத்தாய்கடைபோகக்கண் ... *
பார்த்தெனைவிடாதுபரிந்துகொண்டருளே

சிவதரிசன அகவல் - முற்றும்.

பதினான்காவது

ஆகமநெறியகவல்.

சத்திநிபாதந்தான்பிறந்திதையம் ... ❋
சுத்தமதடைந்துதொல்லைமூவுலகும் ... ❋
கான்றசோறதனிற்கண்டெனவிடுத்து ❋
வீட்டின்பினையேவிரும்பிடினாகம ... ❋
விசாரணைசெய்யவேண்டிடுமுத்தி ... ❋
உண்மையின்மும்முதலுண்மையதாகும்
அஃதையுமன்றியவனியிலோர்பொருள் ❋
உணர்ந்திடுமிடத்திலுருவுடனாமம் ... ❋
தோன்றுதன்முனமேதோன்றிடுஞ்சிவம
இருளினிற்றெரியாதிதுவெனச்சுட்டி[தை
எய்திடுமாயையிருவினையதனின் ... ... ❋
ஆசையிற்பதிபசுவாணவமாயை ... ... ❋
கருமமுந்தோன்றுங்கருவிதினோக்கின் ❋
மும்முதலவையின்முத்தியிற்பசுவும் ❋
விடவேண்டுமென்னும்விருப்பமதனில்
இருவகையாகுமிரும்பதிபசுவும் ... ... ❋
மூவகையாகுமும்மலந்தனின்மற் ... ❋
றவைதனக்குக்குறியதுவிதுவாகும் ... ❋
அதுவிதுநீங்கிலவைமூன்றகலும் ... ❋
அவையினின்மூலமாணவமாகும் ... ❋
அறுவைக்கழுக்கையகற்றிடுமூவரும் ❋
சாணமும்போலச்சாற்றியவிரண்டு ... ❋
மூலங்கெடுக்கமூலனேகூட்டி ... ❋
உற்பவமுதலாயுரைத்திடுமைந்து ... ❋
தொழில்செய்திடுவன்றொன்மையிலேநின்
றந்தகன்கண்ணிலப்படலந்தனை ... ❋
எடுத்திடுமுனமதற்கேற்றவுடதங்கள் ... ❋

சேர்த்திடுனிதமாய்த்தீர்ந்திடுகாலம்... *
பொருததுபோலும்புகன்றிடுமாயைப் *
பிறப்பினுக்கஞ்சிப்பிறப்பைநேர்நீக்கும்
நெறியயதெனவந்நெறியினையுரைப்பார்
ஆரெனத்தேடியாற்றிடுகாலையின் *
சிவமேஞானதேசிகனாகும் ... *
அவனருளாலேயாகமநெறியின் *
ஐந்துதொழிற்குமரனேயுரியன்... *
ஆமென்றுயிர்பொருளச்சார்பவையும் *
உடற்காவலையுமொருங்கேநீக்கி *
அருளினைநோக்கியாசானருளில் ... *
உச்சியினிற்குமுவலம்போல... *
ஆணவமாயையவையினிற்றோன்றும் *
மறப்புநினைப்புமாற்றிடலம்பகல்... *
அற்றவீடென்றேயறைந்திடுமாகமம் *
அவ்வீடதனினனுபவந்தன்னின் ,... *
பெத்தத்தினிற்கும்பெற்றியைப்போல *
இதுவெனத்தோன்று மெவையவையனை
நியதிசெய்ததுவாய்நிற்றல்சமாதி[த்தும்
சமாதியைநீங்கியசாக்கிரந்தனினும்... *
சிவமேயைந்துசெய்கையினடித்தல் *
கண்டுதற்செயலைக்கைவிடவேண்டும் *
இத்தகைநெறியையெய்திப்பாலன் .. *
பித்தன்பசாசன்பெற்றகுணங்கள் ... *
மருவியேநிற்றல்வாய்மைநெறியாம், *
தேகாந்தத்திற்சிவமேசேர்வன்... ... *
இஃதாகமநெறியினியாரணநெறி... *

ஆகமநெறியகவல்- முற்றும்:

உ

பதினைந்தாவது

பிரமானுபவ அகவல்.

✻

நன்னெஞ்சேவா நானுரைக்கக்கேள் ✻
பிரமானுபவத்தைப்பிரத்தியக்கமதாய் ✻
அருட்குருவருளிலறைகுவன்கேளாய் ✻
யாதோர்பொருளும்யாவராயினும் ... ✻
சுருதியுத்தமதாய்ச்சொற்றிடவேண்டும் ✻
மனவுரையதனின்மதித்திடவொண்ணாச் ✻
சச்சிதானந்தத்தற்சொரூபத்தில் ... ✻
சிறந்தசிற்சத்திசெகசத்தியென்றும் ... ✻
இருவகைச்சத்தியெனவன்றேயுள ... ✻
தலையிதிற்பின்னையகிலத்துக்கேது ... ✻
சிற்சத்திமுத்திதானதற்கேது ... ✻
பரத்தினிலபினுபாவமாயொன்றாய் ... ✻
சிற்சத்திநிக்குஞ்செகசத்தியதும் ... ✻
தற்சொரூபத்தைத்தானதுவிடாமல்... ✻
வேறுபோற்றோன்றிவிளங்குமுக்குணமாய்
சாத்துவிதராசததாமதமெனவே ... ✻
சத்துவகுணத்திற்றுக்கியமாயை ... ✻
பரமாயெங்கும்பார்த்திடுமிராசத ... ✻
சாயையுயிராந்தாமதமிரண்டாம் ... ✻
இருண்மாயையெனவிருளுயிர்த்தடுக்கும்
இருளினையிரியயிருமாயைசேர்க்கக் ... ✻
கணக்கதுவாகக்கருமமுண்டாகும் ... ✻
ஆகவைவிதமுமன்றேநிகழும் ... ✻
இவ்வைவிதமாயிலங்கியபின்னை ... ✻
பரத்தினையன்றிப்பார்த்திடிலில்லை ... ✻
சர்வவிடையதற்பரஞ்சுவாசம் ... ✻
சுருதியதாகுஞ்சொல்லாகமமாம் ... ✻

என்றெனவோதுமெழிலார்சுருதி ... *
இஃதேதுணிவென்றெம்மையுமாண்ட . *
அருட்டேசிகனுமறைந்தனனன்றே *
நானேயெனவேஞானநற்குருவை ... *
வினவிடிலித்தகைவிளங்கியபிரமம் ... *
நீயேயென்றுநிச்சயமாகத் ... *
தத்துவமசிகொடுசாற்றினனன்றே ... *
இவ்வுரைப்படியேயிருந்தனுபவத்தில் *
காட்டுகேனுனக்குக்கருத்தசையாவணு *
நன்றாய்நோக்காய்நன்னெஞ்சகமே... *
அரசன்றன்சேயடாதார்சேரி ... *
சேர்ந்தவரினப்போற்றிரிந்திடுமவனை *
அறிந்தவனொருவனவ்விடத்தேகி ... *
அன்னோனிடத்திலரசவிலக்கணம் ... *
காட்டியுணர்த்துங்கணக்கதுபோல... *
நீசிவன்போனிற்குழன்கண்ணே ... *
சிவத்தின்குறியைச்செப்பிடக்கேளாய் *
சாக்கிரமதனிற்றூக்கிடும்பொருளில்... *
நினைவெழுமுனமேநின்றிடுநிலையே ... *
நின்மலநிலையந்நிலையினினோக்கின் ... *
விளங்கிடுஞேயம் விளக்கிடுஞானம் *
நோக்கிடுஞாதுருவனுமிம்மூன்றும் *
நாமேயாகநன்றாய்விளங்கும் ... *
அவ்விடத்தறிந்ததமலசத்தியினால் ... *
அபினபாவமாயேகமுமாம் ... *
அந்நிலைநின்றேயசைவுசெய்நினைவில் *
அடைந்திடுமிடத்திலைவகைப்பொருளும்
முன்பின்னன்றிமுழுதுநிகழும் ... *
இஃதுணர்ந்திடுதலிருப்பின்னையினில் *
அசைவுசெய்நினைவிறந்தவக்கணமே,
சுவாசமங்கிசமெனத்தோன்றிடும்வாக்கு.

நான்றுனெனவேநவிற்றிடாநிற்கும் *
இவையேசுருதியெழிலாகமமாம் ... *
நிலையினிலொன்றாய் நினைவினிலைந்தாய் *
விளங்குநம்மிடத்தின் மேவுசத்திகளால் *
இத்தகையன்றேயிருந்துடனிகழும் ... *
இதனுண்மையிருஞ்சிவமாகும் ... *
இவ்வனுபவத்தையிலங்கிட நீயும் ... *
கண்டுடனிருந்துங்கலக்கமற்றுக் *
கண்டிடும்பொருளைக்கருதிவேறாகச் ... *
சிவனைப்போலத்தியங்கினையினிநீ ... *
நின்றநிலையேநிலையெனநிற்கில் ... *
கண்டிடைப்பொருளுங்காயுநாமாக *
நினைவொடுநிலையேநிலையெனநிற்கில் ... *
விளம்புமம்பொருளும்வேறாய்விளங்கும்
நின்றமுன்னிலைக்கு நினைவொடுநிலைக்கும்
நாமேயிடமெனநம்மையேயன்றி ...
விளங்காதென்றுட்விளங்கிடுமுன்னிலை *
சற்சத்தியென்றுஞ்சாற்றியபின்னிலை ... *
அசற்சத்தியென்றுமவையின்முற்சத்தி *
சுயசத்தியென்றுஞ்சொல்லுபிற்சத்தி *
கற்பிதமென்றுங்கருதியுணர்ந்தே *
அனைத்துநாமெனவேயறிந்தந்தறிவே *
இடைவிடாதிவ்வுடலிறந்திடும் ... *
வரையுநிற்றிடில்வாய்க்குநம்வீடே ... *

பிரமாநுபவஅகவல்-முற்றும்.

உ

பதினேழாவது

சிவசமரசவாத-அகவல்.

கலிவலியினுக்குறக்கமோர்காலும் ...
சித்தமாயில்லாத்திருமுதுகிரிவாழ் ...
என்னையும்பொருளாவெண்ணியாண்டருளும்
விருத்தவம்பிகையேயினையனேற்கிஃதொன்
றையமிவ்வையமனையேநின்றால் ... ...
அன்றிமற்றொருவராரினுநீங்கா ... ...
திவ்வையந்தனையானின்றகற்றத் ... ...
துணிவிதுவென்னச்சுருதியின்முடிவின் ...
அருளியபடியேயருள்செயவேண்டும் ..
ஏதெனிற்சொல்கேனெழில்வேதாகமத் ...
துயிர்பரமேசமோரிரண்டெனவே ...
ஓதியவவையிலும்பர்கண்முனிவர் ...
ஆரியர்தந்தமகமிசைக்கொண்ட ... ...
படியினிற்சென்றுபரமடைந்தனர்கள் ...
அவையிலொன்றையலநெறியென்றே ...
தள்ளுதல்கூடாச்சமரசமாகத் ... ...
திரிவையமறச்சிவையேயுணர்தின் ... ...
அனுபவப்படியேயனுக்கிரகஞ்செய ...
வேண்டுமோர்நெறிமேவியேமுயலும்
சாதகர்தமக்குச்சமரசவாதம் ... ...
அருளில்விளங்காதனுட்டித்திறில் ... ...
தானிகழ்முத்திதானுனவர்கட் . ...
கருளிவிளங்குமருளாலுனக்குத் ... ...
திருவடிசூட்டித்திரிவுசெய்யிருளைத் ...
தீரவகற்றிச்சிவமதிறுமே ...
வைத்துபரிசேவகத்துணையென்னில் .

உரைக்கேனியானுமுன்னருளதனில்
இதுவதுவென்னுமியல்புகளில்லாச்
சச்சிதானந்தத்தற்சொருபத்தில்
பேதவபேதப்பேசுதலின்றி
அநிர்வசனமதாயதுவுளபோதே
சயிற்றினிலரவுகற்பிதம்போல
நினைவுருபமதாய்நிகழ்ந்திடும்பின்னை
அஃதனில்விளங்குமறைமுப்பொருளும்
எத்தகையென்னின்வியம்பியநினைவும்
சுட்டியேநிற்குஞ்சுட்டிக்கண்டிடில்
செகமதுவாகுஞ்செப்பியவதனைக்
காண்குதலுயிராங்காணவிளக்கல்
பரமதுவாகும்பற்றியசகத்தில்
செகமதுமாயைசெகத்தினைநோக்கப்
பண்ணலஞ்ஞானம்பார்த்திடுமிடத்தில்
அதுவிதுவெனலாலருள்வினையிவ்வகை
நினைவினின்மும்மலநிகள்பரமுயிரொன்
றவகைப்பொருளுமனாதியேநிகழும்
சொருபமுன்னளவுஞ்சொத்திடும்பின்னை
கற்பிதவடிவாய்க்கலந்துடனிற்கும்
நினைவதுவில்லாநிஜசொருபத்தைக்
குறித்திவைகற்பிதங்குறியாவிடத்தில்
கற்பிதமாகவைத்துநிகழும்
நினைவில்சொருபநிகழ்வேதாந்தம்
நினைவொடுசொருபநிகழாகமாந்தம்
அதனுவிரண்டுமனாதியதாகும்
நிஜசொருபற்குநிகழ்பந்தமுத்தி
ஒருகாலுமிலுளநினைவதனின்
பந்தமுத்திபகர்ந்திடலாகும்
நினைவினுண்டாய்நிகழ்ந்திடுமியானும்
மறதியிலுயிர் [illegible] ங்கியுழன்றா

நின்னருளதனினியதிசெய்தனைத்தும்... *
நீயுமியானுநின்னினுயிருடன் ... *
போலவேநின்றும்போக்கியவிடத்தில் *
ஒன்றாய்க்கண்டேனுறுதியதாக ... *
இரண்டென்றவர்க்குமிரண்டதாய்நிற்கும் *
ஒன்றென்றவர்க்குமொன்றதாய்நிற்கும் ... *
இத்தகைக்கண்டேனெழின்முத்தியதை *
இதனாலொன்றினையுறுதியாய்க்கொண்டே... *
ஒன்றினைத்தள்ளவொருக்காலுங்கூடா ... *
நினைவில்சொரூபநிகழ்த்திடுமிரண்டாய் *
இஃதினிலையமெள்ளளவானும் ... *
இன்றியந்தேனிவ்வனுபூதி ... *
திரிவோதுணிவோசெப்பிடவேண்டும் ... *
வாராய்புதல்வாமாசறநீயும் ... *
சமரசவாதஞ்சாற்றியபடியே .. *
ஏன்னுபவமுமெழின்மறைமுடிவும் *
இதுதிரிவல்லவெழிற்றுணிவேயாம் ... *
நமதருளாலேநன்றாயறிந்தாய் ... *
இனிவாழ்வாயென்றெனைவாழ்த்தி *
இதுபிரமாணமெனவென்றனக்கு ... *
உறுதியாய்நீயேயுரைக்கினுன்னருளில்... *
இரிகைவயமறத்தேர்ந்து ... *
சமையிகளுடனேதர்க்கித்தலற்றேன் ... *

சிவசமரசவாத அகவல் - முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

உ

ஸ்ரீ குமாரதேவர்

சரித்திரம்.

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்தஸ்வரூபமே ஒருருவாகத்தடித்த ஸ்ரீகுமாரதேவரர் முற்பிறப்பில்பரமசிவத்தைநோக்கி- மல்லிகார்ச்சுனபர்வதத்தில்நிஷ்காமதவஞ்செய்கையில்- அந்தச்சுவாமிகளோடுகூட- வேறொருவர்- அந்தப்பர்வதத்தின்கண்- தவஞ்செய்துக்கொண்டிருந்தார்-அப்போது,பரமசிவம்-அவரதுதவத்திற்கிரங்கிப்பிரத்தியட்சமாயெழுந்தருளிவந்து, உனக்கு-என்னவரம்வேண்டுமென்றுகேட்குமளவில்-அவரோ - ஒன்றைக்கருதி - ஒன்றைக்கேட்டமாத்திரத்தில்- பரமசிவம்- திருவுளத்தில் முனிவுகொண்டு-அடாநீ-ஜடாமுனியாகக்கடவதென்றுசபிக்க-அதுகேட்டு-அவரும்-திடுக்கிட்டெழுந்துநின்று-(சுவாமீ) இந்தச்சாபம்- அடிமைக்கு- எந்தக்காலத்தில்விமோசனமாகுமென்றுகேட்க-அடாநீபோய்- விருத்தாசலத்தில்-மணிமுத்தாநதிக்கரையிலிருக்கின்ற-அரசமரத்தின்மேலிருந்தாயாகில்-இந்தப்பர்வதத்தில்- உன்னோடு-தவஞ்செய்துநிற்கின்ற - எமது அன்பனாகிய ஒருவன்-கன்னடதேயத்தில் ராஜனாகவவதாரஞ்செய்து-சிறிதுநாள் அரசுபண்ணி - பிற்பாடு- விரத்தியுண்டாய்-பேளாயூர்ச்சார்ந்தலிங்கசுவாமிகளிடத்தில்-அனுக்கிரகப்பெற்றுக்கொண்டு- ஆசிரியருத்தாரப்படிவிருத்தாசலம்வந்து-நீஇருக்கின்றஅரசமரத்தினீழலில்-உள்க்காருவான்- அப்போது-நீஅவனைக்கண்டு வணங்கிக்கேட்டால்- அவன்-விமோசனஞ் செய்வானென்று, திருவாய்மலர்ந்தருளியமாத்திரத்தில்-அந்தஜடாமுனியும்- (சுவாமீ) அவருக்கு- முத்தித்திசை-

எப்போதென்றுகேட்க-அடா-இந்த-அன்பன்-இதற்குமுன்னர்-ஐந்துசுத்ததேகமெடுத்து-நம்மைநோக்கி-நிஷ்காம தவஞ்செய்திருக்கிறான் இஃதாறுவதுதேகம்இன்னம்- ஒருதேகத்தில்முத்தியைப்பெறுவானென்றருளிச்செய்ய-அதுகேட்டு-ஜடாமுனியும்பாக்கியமென்று சுவாமியிடத்தில் விடைபெற்றுக்கொண்டு-போய்-மேற்சொல்லிய அரசமரத்தின்மேலிருந்துஎப்போதுவிமோசனகாலம் நேரிடுமென்றுவழிபார்த்துக்கொண்டிருந்தான்.

குமாரதேவரோ வென்றால் - பரமசிவத்தின்-திருவருட்படி-அருளே - திருவுருக்கொண்டபோதினும்-ஆசிரியர்வேண்டியிருப்பதால்-கன்னடதேயத்திலவதரித்து-சிறிதுநாளரசுசெய்து- துறவுபூண்டொருநாள்தம்மிடத்திலுள்ளமந்திரிமார்களில்- முதல்மந்திரியானவரால்தமதுசரித்திரமுழுதும் பெனாயூர்ச்சாந்தலிங்கசுவாமிகளுக்குத்தெரிவித்தபின்புதாமேபோய்ஷைசுவாமிகளைக்கண்டு-வணங்கிநிற்ப,அதுதெரிந்துசுவாமிகளும்இவரதுபரிபாகத்தைநோக்கும்பொருட்டு- தம்மிடத்திருக்கும்- கையேட்டுத்தம்பிரானைப்பார்த்து- அப்பாஇவனைப்பார்த்தால் - அரசனைப்போலிருக்கின்றது-இவன்-இந்தவழிக்குப்பாத்திரவானல்ல-ஆதலால்-இவனை அரசுக்கே-போகும்படிசொல்லென்றுசொல்ல- அதற்கு- அந்தத்தம்பிரானும்(சுவாமீ)இந்த அரசனிடத்தில்-அதிதீவரபக்குவமுடையசற்சிஷருக்குள்ள- பதினெண்குறியும்உண்டாயிருக்கிறதேயென்று-சைகையாகச்சொல்ல- சுவாமிகளும்முன்பே-அறிந்திருப்பதால்-இவனைநமதுஎருதுக்குப்புல்லறுத்துப்போடச்சொல்லென்றுகட்டளையிட்டருள-அப்படியே-தம்பிரான்-அரிவாளும்-புல்லுகட்டுங்கயிறுங்கொடுத்தனுப்ப-மேற்படிகுமாரதேவரும்-அந்தத்திருப்பணியைச் சிரசாவகித்துக்கொண்

டு-வயலுக்குப்போய்- பள்ளர்கள் புல்லறுப்பதைப் பார்த்து- தாமும்- அறுக்கநினைத்து- இடக்கையால்- புல்லைப்பற்றி- வல்க்கையிலுள்ள அரிவாளைப்புல்லின் மேற்பூட்டாமல்இடக்கைமேற்பூட்டியிழுக்க- கையறுபட்டமாத்திரத்தில்மேற்படிவலக்கையைப்பார்த்துக்கோபித்தார்-இந்தஅதிசயத்தை-மேற்படி- பள்ளர்கள்கண்டு, நீர்- ஆரென்றுகேட்க- நான்இன்ன-சுவாமிகளுடைய வாகனத்திற்குப்புல்லறுப்பவனென்றுசொல்ல- அதுகேட்டுஅவர்கள் - ஆச்சரியமடைந்துஇவர்அரசனைப்போலிருக்கிறதென்றெண்ணிதாங்களே- புல்லறுத்து- கட்டுகட்டி-அவர்திருமுடிமேல் வைக்க- அந்தச்சுமைபொருமல் - திருமுடிசாய்ந்துபோவதைக்கண்டு-அப்பள்ளர்களே அந்தப்புற்சுமையையெடுத்துவந்து-மேற்படி-மடாலயத்துவெளியில் வைத்துப்போனார்கள்.

இந்தப்படி- இரண்டுநாள்சென்றபின்புமூன்றுவதுநாள்- மேற்படிபுற்சுமையையெடுத்துவந்தபள்ளன்-இவர் சேதி முழுதும்கையேட்டுத்தம்பிரானுக்குத் தெரிவிக்க- அவரும்- இவர்கையறுப்புண்ட சேதியைசுவாமிகளுக்குக்குறிப்பாகத்தெரிவிக்க, அதுதெரிந்து- சுவாமிகளும், குமாரதேவரைப்பார்த்து - முனிவுகொள்ள, அவரும்பயந்துபேசாமலிருந்துவிட்டார்.

பிற்பாடு-அன்றுராத்திரிசுவாமிகள் கையேட்டுத்தம்பிரானையழைத்து-அப்பாளங்களிருவருக்கும்வெவ்வேறேகட்டமுதுகட்டி-ஒருதண்டத்தில்மாட்டி,அரசனிடத்திற்கொடுத்து-நம்மோடுகூட-அனுப்பிவையென்றுகட்டளையிட்டருள-அவரும்அப்படியேசெய்து- அனுப்பிவைக்க-சுவாமிகள்முன்னும்- குமாரதேவர்பின்னுமாய்ப் போகையில்-சிலதூரம்போய் சுவாமிகள்- இவரைத்திரும்பிப்பார்த்துஎன்னதாமச

மென்றதட்ட-அதுகேட்டு-இவரும்-பயந்து சுவாமீ ஒருபுறம்-அச்சிலிங்கம் - மற்றொருபுறஞ்சுணையுத்தமி ழுக்கின்றதேயென்றுசொல்ல- அந்தக்குறிப்பறிந்து சுவாமிகள்-தமக்குத்தாமேமகிழ்ச்சியடைந்து- அவி டத்துள்ள-ஒருகுளக்கரைமேலிறங்கினார் அவிடத்தில் இருவரும்ஒன்றாக-உட்கார்ந்து, இரண்டன்னத்தையு மொன்றாகச்சேர்த்து- ஸ்ரீகுமாரதேவர் சுவாமிகளுக் குப்பரிமாறவே-சுவாமிகள்நைவேத்தியங்கொண்ட பின்புசேடமான மகாபிரசாதத்தைத்- தாமும்-உட் கொண்டு- சிறிதுநேரம் அவிடத்தில்இருவரும்- வசி த்துக்கொண்டிருந்து- பிற்பாடு-மடாலயத்திற்கு வந்துசேர்ந்துசிலநாள்கழித்து- மேற்படி- சுவாமிக ளிடத்தில்.

அநுக்கிரகம்பெற்றுக்கொண்டு- சாதனைசெய்து முதிர்ந்தகாலத்தில்- ஒருநாள் சாந்தலிங்கசுவாமிகள் இவரைமகாராஜா வென்றுபெயரிட்டழைத்து அப் பாநீவிருத்தாசலத்துக்குப்போக வேண்டுமென்றுக ட்டளையிட்டருள-அங்ஙனே நல்லதென்றுவிடைபெ ற்றுக்கொண்டுவிருத்தாசலத்தைநோக்கிவருகிறவழி யில்-சின்னசேலத்திற்குக்கீழ்ப்புறமானகாட்டில்இவ ர்நிமித்தம்அன்புகூர்ந்து-பழமலைநாதரே- ஒருபிரா மணரூபமாயெழுந்தருளிவந்து- தண்ணீர்ப்பந்தல் வைத்துக்கொண்டிருந்துஇவரைக்கொண்டுஅப்பாநீ ஆயாசமாய்ப்போகிறபடியால்நால்வகைஜலமுமிரு க்கின்றது- உனக்குவேண்டியமட்டும்- சாப்பிட்டுவி டாய் தீர்க்கலாமென்றுபசரித்துத்- தண்ணீர்க்கொடு க்க- இவர் அதைச்சாப்பிட்டு- தாகநிவிர்த்திபண்ணிக் கொண்டு- விருத்தாசலம்வந்துசேர்ந்து - மணிமுத் தாநதிக்கரையிலிருக்கின்றஅரசமரத்தினிழலில் ஆயா சமாய்ச் சயனித்துக்கொண்டு-பிரமானந்தநித்திரை யிலிருந்தருளினார்.

அதுசேதிபெரியநாயகியாரறிக்து தனதபிடே கத்திற்கு சுவணபாத்திரத்தில் வைத்திருந்த பசுவின் பாலைஎந்திக்கொண்டுஓர்பிராமணஸ்திரீயைப்போல இவரிடத்தில்வந்து-தலைமாட்டிலுட்கார்ந்து- தனது திருமடியின்மேல்-இவரது திருமுடியைத் தூக்கிவை த்து-அந்தப்பாலைப்புகட்டினபின்பு- இவர்ஆயாசந் தீர்ந்து-கண்ணைவிழித்து-நீ- ஆரம்மாவென்றுகேட்க அப்பாகுமாரதேவா- நான்தான்பெரியநாயகிநீஎப் போதும்என்னிடத்தில்தானேசுகமாயிருவென்றுதி வாய்மலர்ந்தருளி-உடனேமறைந்துவிட்டாள்இதை மேற்படி-ஜடாமுனிகண்டு- மரத்தைவிட்டுக்கீழேயி றங்கி-பிராமணவுருவமாய்வணங்கிநிற்க- இவர்-அந்த ஜடாமுனியைப்பார்த்து-நீ-யாரென்றுகேட்க நான் ஜடாமுனி யென்றுசொல்ல நீஇவிடத்திற்குவந்தகா ரியமென்னவென்று கேட்டமாத்திரத்தில் ஜடாமுனி தனசரித்திரமுழுதும்விவரமாகச்சொல்ல-அதுகே ட்டு-குமாரதேவரும்-சந்தோஷமாய்ஜடாமுனியின் சாபநிவர்த்திபண்ணிசிறிதுநாள் அவிடத்திற்றனேக ரபாத்திரம்பண்ணிக்கொண்டிருக்குங்காலத்தில் அவி டத்திலுள்ளஒருகுடும்பியானவன் இவரைமகாமுனி யென்றறிந்து-நாள்தோறும்உண்மையாய்த் தரிசன ம்பண்ணிக்கொண்டேவர-அவனுக்குநாளுக்குநாள் சகலசம்பத்தும்-அபிவிர்த்தியடைந்துவருகையில்ஒ ருநாள்அவன்,குமாரதேவரைக்கண்டுவணங்கி- (சுவா மீ) அடியேனுக்குஏதேனும் ஓர்திருப்பணிகட்டளை யிட்டருளவேண்டுமென்றுவருந்திக்கேட்க - குமார தேவரும்-அப்பா - அப்படிஉனக்கிஷ்டமிருந்தால்- ஸ்ரீபெரியநாயகியார்சந்நிதானத்திற்கெதிராக - ஒரு மண்டபங்கட்டிவையென்றுகட்டளையிட்டருளஅது ம்அப்படியேமகாபாக்கியமென்று மண்டபங்கட்ட எத்தனித்துக்கட்டும்போது- உத்திரக்கல்மேலேறும

ல்வருத்தமடைந்து-குமாரதேவருக்குத்தெரிவிக்ககுமாரதேவரும்,விபூதியைக்கொடுத்துஇதை - அந்தக்கல்லின்பேரில்போட்டுத்தூக்கென்றுத்தரவுசெய்ய- அப்படியேசெய்துமுடித்தபின்பு - அந்தக்குடும்பியும்சந்தோஷித்தனாய்-குமாரதேவனைவணங்கி நின்று(சுவாமீ) தேவருடையபிரபாவத்தைஇன்னதென்றளவிட்டுச்சொல்ல- ஆராலாகுமென்றுநானாவிதமாகத்தோத்திரஞ்செய்ய - குமாரதேவரும்-அவனைஅழைத்துக்கொண்டுபோய்கோபுரவாயிலிற் செய்துவைத்திருக்கும் - இரண்டுதுவாரபாலகருடையமுதுகும்உளைபட்டிருப்பதைக்காண்பித்து-இவர்களுக்குத்தவனகஞ்சிகாய்ச்சிநைவேத்தியம் பண்ணென்றுகட்டளையிட்டருள-அவனும்-மகாபாக்கியமென்றுஅப்படியேசெய்வித்து-கிருதகிருத்தியனானான்.

பிறகுஒருநாள் குமாரதேவரும் ஓர்குடும்பிவீட்டுவாசலில்கரபாத்திரத்திற் குச்சென்றுகையேந்த- அவர்கள்இவரதுமகிமையையறியாதவர்களாய்-தங்கள்வீட்டில்சமைத்துவைத்திருந்த-மச்சத்தை அன்னத்தோடுகலந்து இவர்கையிற்பரிமாற அதுதெரிந்து ஸ்ரீகுமாரதேவரும்அங்ஙனேகுளக்கரைக்குச்செல்ல அந்தமச்சம்உயிரோடுகுளத்திற் குதித்துப்போய்விட்டது.

இப்படியிருக்க ஒருகுஷ்டரோகியானவன்தன்துதேகவருத்தம் நீங்கவேண்டுமென்றுநாள்தோறும் இடைவிடாமல்- ஸ்ரீகுமாரதேவரைக்கண்டுதரிசனம் பண்ணிக்கொண்டேவருகையில் ஒருநாள் அதிகவாதனையினால்சகிக்கப்படாதவனாய் ஸ்ரீகுமாரதேவரதுதிருவடியில்வந்து விழுந்துகோவென்றுமுறையிட்டுச் சொல்லகுமாரதேவரும்-அப்பாநாம்வயித்தியனல்லவேயென்றுசொல்லஅவனும்(சுவாமீ)தேவரதுதிருக்கையினால்விபூதிகொடுத்தால்எனதுரோகநிவிர்த்தியா

குமென்றிரங்கிக்கேட்க, குமாரதேவருந்திருவுளமிரங்கி விபூதியையள்ளிஅவனது இடக்கையில்வைத்துவல க்கையால்மூடிக்கொள்ளச்சொல்லி பழமலையார்சந்நிதானத்திலுள் ஒருமாடத்திலிருக்கும் விக்கினேஸ்வரனைக்குறியாகக்காண்பித்துநீ அந்தவிக்கினேஸ்வரர்முன்னேபோய் இரண்டுகண்களையுமூடிக்கொண்டுநின்று அங்கேநடக்கின்ற அதிசயத்தைநமக்குவந்து சொல்லென்றுகட்டளையிட்டருள அவனும்அப்படியேபோய் நின்றமாத்திரத்தில் அவனுக்குச் சுழுத்தியேயாற்றோன்ற அத்தருணத்தில்அந்த விநாயகக்கடவுள்தமது துதிக்கையைநீட்டி இவனது இடக்கையிலிருந்தவிபூதியைத்தொட்டதுபோலக்கண்டுவிழித்துச்சுவாமிகளிடத்திற்குவந்துவிண்ணப்பஞ்செய்தமாத்திரத்தில்குமாரதேவரும்ஆனந்தமாய்- அந்தவிபூதியைத் தொட்டுத்தரித்துக்கொண்டு அவனையும்தரித்துக்கொள்ளும்படி- உத்தரவுசெய்ய அவன் அப்படியே தரித்துவருங்காலையில் அவனதுகுஷ்டரோகம்நிவிர்த்தியாகிச்சவுக்கியமடைந்தான்.

இப்படியிருக்கின்றநாளையில்ஒருநாள்ஸ்ரீகுமாரதேவரும்திருவாரூர்மகோச்சவத்திற்குப் போயிருந்தபோது- ரதோச்சவத்தினன்றைக்கு- தியாகராயர்ரதமேறிமாடவீதிவருகையில் அந்தரதத்திற்கு நேரேகுமாரதேவர்நின்றுபார்த்துக்கொண்டிருப்பதை இரண்டுசைவர்கள்கண்டு ஒருவர்க்கொருவர்விகடமாய்வீரசைவமருளைப் பார்த்தீர்களோவென்றுபேசிக்கொள்ள-அந்தவிகடவார்த்தையைக்குமாரதேவர்கேட்டுரதத்தில்வருந்தியாகராயரைப்பார்த்து- (தியாகராயா)வீரசைவம்-மருளானால்ரதம்நடக்க அருளானால்ரதம்நிற்கவென்று திருவாய்மலர்ந்தருளிசிறதூரம்போய்ஒருமரத்தின்கீழில்உட்கார்ந்திருந்தார்- அதுதெரிந்து அத்திருவிழாவின் தர்ம்மகர்த்தாவாகியதஞ்

சாவூர்-அரசன்-ரதமானது-நிலைவந்து சேர்ந்தபிறகு போஜனஞ்செய்கிறதென்னும் நிச்சயமுடையவனுதலால்-என்னசெய்வதென்றச்சமுற்று- இவிடத்தில்நடந்த-ரகசியந்தெரியாதபடியினால்-சாயங்காலபரியந்தமும்-அந்தரதம்நடக்கும்படி அனேக-பிரயெத்தினங்கள்செய்வித்தும்அஃது,சற்றாகிலும் அசையாது நிற்கபிறகுமேற்படி அரசன் இவிடத்தில் நடந்தரகசியத்தைக்கேள்விப்பட்டு ஸ்ரீகுமாரதேவரிடத்திற்குவந்து அவரைக்கண்டுவணங்கி விண்ணப்பஞ்செய்யஸ்ரீகுமாரதேவரும்அரசனைப்பார்த்து இந்தமருளனிடத்தில்உங்களுக்குஎன்ன அலுவல்போங்களென்றுசொல்லஅரசனும்(சுவாமீ)இந்தப்பிழையை மன்னித்துரதத்தைநடப்பித்தருளவேண்டுமென்று வெகுவாகத்தோத்திரஞ்செய்ய அதற்குஸ்ரீ குமாரதேவரும்திருவுளமிரங்கிஅந்தராஜனுடனுஞ்சேனைகளுடனும்எழுந்தருளிவந்துரதத்தின்முன்னே நின்று தியாகராயனைப்பார்த்து (தியாகராயா)வீரசைவம்-அருளானால்- ரதம்நடக்கமருளானால்ரதம் நிற்கவென்றுதிருவாய்மலர்ந்தருளினமாத்திரத்தில்- ரதம்ஜரோலென்று நடந்துநிலையிற்போய்ச்சேர்ந்தது.

இப்பால்குமாரதேவர் மறுபடியும் விருத்தசைலம்வந்து அவ்வரசமரத்தின்கீழ் வாசம்பண்ணிக்கொண்டிருக்குங்காலையில்- பிறதேசத்திலுள்ள ஓர்மாந்திரீகனானவன்விருத்தசைலத்திலுள்ள பத்திரகாளியைத்தன்கைவசமாக்கிக்கொள்ள எண்ணி- தனதுநாட்டைவிட்டு மணிமுத்தாநதியின் வடதிசையாக வருகையில் ஷெ பத்திரகாளியறிந்து அச்சமுற்றவளாய் ஒருஸ்திரீயைப்போல ஸ்ரீகுமாரதேவரிடத்திற்குவந்துஅவரைப்பிரதக்ஷிணநமஸ்காரம்பண்ணிஅவருக்கெதிரே நிற்க - அதுகண்டுகுமாரதேவரும் நீயாரென்றுவினவ-சுவாமீ நான்பத்திரகாளி என்னையிந்தப்பிரகாரஞ்

செய்யும்படி ஒருசண்டாளன் வருகிறான் அதனால்பய
ந்துவந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய அதற்குகு
மாரதேவரும் என்றால் உனக்குஆகவேண்டியதென்
னென்றுவினவ-பத்திரகாளியும் சுவாமீதேவரதுதிரு
வடிகளை அடியாள்சிரசில்மேல்வைத்தால்எனதுஆப
த்துநீங்குமென்று விண்ணப்பஞ்செய்ய - ஸ்ரீகுமார
தேவரும் திருவுளமிரங்கி அங்ஙனே நல்லதென்று பத்
திரகாளிசந்நிதிக் கெழுந்தருளிவந்து அந்தவிக்கிரகத்
தின்முடிமேல் தமது திருவடியைத் தூக்கிவைத்தமா
த்திரத்தில்அந்தமாந்திரீகனுடையஇரண்டுகண்களும்
அவன்மனம்போலவேஇருளடைந்தது- அதுதெரிந்
து அந்தமாந்திரீகனும் பயங்கொண்டு இந்தஸ்தலத்தி
ல்பெரியவாள் வாசஞ்செய்கிறார்போலிருக்கிறதென்
றெண்ணி அவிடத்தில்விசாரிக்க - ஸ்ரீகுமாரதேவரிரு
க்கிறதைக்கேள்விப்பட்டு- அவரிருக்குமிடந்தேடிவ
ந்து அவரைக்கண்டுவணங்கிநிற்க- ஸ்ரீகுமாரதேவரும்
அவனைப்பார்த்துநீயாரென்றுவினவ- சுவாமீநான்மா
ந்திரீகன்-நான் இவிடத்திற்கு இந்தஉத்தேசமாய்வந்த
இடத்தில் எனக்குஇவ்வகையானஆபத்துநேரிட்டது
இதைத்தேவரீர்தீர்த்தருளவேண்டுமென்று வெகுவா
கத்தோத்திரஞ்செய்துநிற்க- ஸ்ரீகுமாரதேவரும் சற்
றேதிருவுளமிரங்கிஅடாஉன்சரீரமுள்ளவரையிலும்இ
ந்தமாந்தரீகத்தைவிட்டிருப்பையாகில் உனக்குஒருக
ண்மாத்திரந்தெரியுமென்று ஆக்கியாபித்தருளிய மா
த்திரத்தில்- அவனும்அப்படியேநல்லதென்றுஸ்ரீகு
மாரதேவரதுதிருவடியைத்தொட்டுச்சொன்னவளவி
ல்ஒருகண்தெரிந்து தன்னுடையதேசத்திற்குப்போ
ய்விட்டான்.

இப்பால்ஒருகுடும்பியானவன்புத்திராபேக்ஷை
யினால் ஸ்திரீயுந்தானும்நெடுநாளாய்விசனப்பட்டுக்
கொண்டு ஸ்ரீகுமாரதேவரைக்கண்டு நாள்தோறுந்து

ரிசனம்பண்ணிவருகையில்- ஒருநாள்குமாரதேவர்தி
ருவுளமிரங்கி ஷை குடும்பிக்குவிபூதியளிக்க அவ்விபூ
திமுன்னிலையால் அவர்களுக்குஇரண்டுஆண்பிள்ளைக
ள்பிறந்து அதுகள்வளர்ந்து ஐந்துவயதாகி பள்ளிக்
கூடத்தில்வைத்துவித்தியாப்பியாசஞ்செய்வித்தபிற
கு-அந்தப்பிள்ளைகளுக்கு இலக்கணாப்பியாசஞ்செய்
விக்கவேண்டி இலக்கணவித்துவானாகிய சிதம்பரபிள்
ளையென்பவரை,மதுரையிலிருந்துவரவழைத்து,ஷை
இரண்டுபிள்ளைகளுக்கும் இலக்கணாப்பியாசஞ் செய்
வித்து வருங்காலத்தில்-ஒருநாள் ஸ்ரீகுமாரதேவர்கு
க்ஷிபாதைநிமித்தம் அந்தக்குடும்பிவீட்டுக்குவருகை
யில் ஷை. சிதம்பர பிள்ளையென்னும் உபாத்தியாயர்
இவரிடத்தில் மதிப்பற்று இறுமாந்திருப்பதைக்கண்
டு அவரைத்தடுத்தாட் கொள்ளத் திருவுளங்கொண்டு
அவரைநோக்கி ஓர் வாக்கியத்தைக்கூறி- அதற்குப்ப
யன்வினவ- அவருக்கென்னவித்வசாமர்த்தியமிருந்த
போதினும் இந்தச்சந்நிதானத்தில் நாவெழாமையா
ல்பயன்கூறாது மயங்கிநின்று சற்றேதெளிவுண்டாகி
குமாரதேவரது திருவடியில்விழுந்துவணங்கிசுவாமீ
அடிமையைரக்ஷித்தருளவேண்டுமென்று விண்ணப்
பஞ்செய்து- அதுமுதல்துறவுபூண்டுஷை குமாரதே
வரதுபின்னாகவே சாயைபோற்றொடர்ந்துதானுங்க
ரபாத்திரம்பண்ணிக்கொண்டிருந்தார்,அவரது ஆரா
மையையும்,மெய்யன்பையும்,குமாரதேவரறிந்து அ
வரைத்தமது ஆசிரியரிருக்கும் திருப்பேரூருக்கு
க்கூட்டிக்கொண்டுநடந்து, மடாலயத்திற்குச் சமீப
மாகப்போகையில்- விடியற்காலையாகையினால்எழுந்
திருந்து வெளியேவந்துநிற்கிற தம்பிரான்களைக்கண்
டுசுவாமிகளிருக்குஞ் சமையமெப்படியென்றுவின
வ-சுவாமிகள் பரநிட்டையிலெழுந்தருளியிருக்கின்ற
தெனக்கூற-ஆனால்நாம்பணிசெய்வோமென்றுநினை
த்து- ஸ்ரீகுமாரதேவர் சாணச்சட்டியெடுத்துக்கொ

ண்டுதிருமெழுகிட-சிதம்பரசுவாமிகளும்திருவலகெ
டுத்துக்கொண்டு திருவலகிட்டார்- இத்திருப்பணிமு
டித்தபின்புசுவாமிகள் திருக்கண் விழித்தருளியசெதி
தெரிந்து- இவ்விருவர்களும் மடாலயத்துட்சென்று
சுவாமிகளைக்கண்டு வணங்கிநிற்க- சுவாமிகளுங்குமா
ரதேவரைப்பார்த்து அப்பாஉன்னை யடுத்துநிற்கின்
றவன்யாரென்றுவினவ- தென்னாட்டுச்சைவனென்று
சொல்ல-இவனைஏனழைத்துவந்தாயென்றுகேட்கஅ
தற்குக்குமாரதேவர்மௌனமாயிருந்துவிட்டார்-இ
ப்படிஇரண்டுதினஞ்சென்றபின்பு - சிதம்பரசுவாமி
களதுநடையைக் கைவிட்டுத்தம்பிரானமிந்துசுவா
மிகளைவணங்கிநின்று-சுவாமீஇந்தச்சைவன் மிகுந்த
வல்லவனா யிருக்கிறபடியால் இவனைத்திருவடிக்கு ஆ
ளாக்கிக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பஞ்செ
ய்ய- அதற்குச்சுவாமிகளும்அத்தம்பிரானைப்பார்த்
து அப்பாநமக்கிருக்கிறசந்ததிபோதும்- நமதுசந்த
திக்குச்சந்ததிநெடுநாளாயில்லாதிருந்து இப்போது
கிடைத்தபடியால் அப்படியே செய்விக்கவேண்டு
மென்றுகட்டளையிடஅதற்குத்தம்பிரான் மௌனமா
யிருந்துவிட்டார்-இப்படிஇரண்டுநாள்கழிந்தபின்பு
மூன்றுவதுநாள் சாந்தலிங்கசுவாமிகள் குமாரதேவ
ரைஅழைத்து நீ ஊருக்குபோவென்றுசொல்ல கு
மாரதேவரும் இவன் இவிடத்தி லிருக்கட்டுமென்று
விண்ணப்பஞ்செய்ய-சுவாமிகள் இவிடத்தில்வேண்
டாம்நீயேயழைத்துக் கொண்டுபோவென்றுசொல்
ல ஸ்ரீகுமாரதேவரும் இவனைக்கொண்டுபோய்அடி
மைஎன்னசெய்கிறதென்றுகேட்க-சுவாமிகளும் ஸ்ரீ
குமாரதேவரைப்பார்த்து அப்பா நீஇவனைக்கொண்
டுபோய்பக்குவமறிந்து உனக்குச்சொன்னதை இவ
னுக்குச்சொல்லிவையென்றுகட்டளையிடகுமாரதே
வரும்மகாப்பிரசாதமென்றுவிடைபெற்றுக்கொண்
டுஇருவரும்விருத்தாசலம்வந்துசேர்ந்து- பிறகுசித்

ம்பரசுவாமிகளது பக்குவஞ்சோதித்து அனுகிரகஞ்செய்தருளினார்- அவர்தான் திருப்போரூர்ச்சந்நிதானம்விளக்கியசிதம்பரசுவாமிகள்.

இப்படி நடந்துவருங்காலத்தில் பெரியநாயகியாரும்குமாரதேவரால்சாஸ்திரஞ்செய்விக்கும்படி திருவுளங்கொண்டுகுமாரதேவரதுயோகில் வந்து அப்பாகுமாரதேவா-நீசாஸ்திரஞ் சொல்லவேண்டுமென்றுதிருவாய்மலர்ந்தருள - குமாரதேவரும் அம்மா அடிமையாற்சொல்லமுடியாதென்றுவிண்ணப்பஞ்செய்ய பெரியநாயகியாரும் ஆனால் நாமே உனது நாவில்நின்று சொல்லி முடிக்கிறோமென்று ஆக்கியாபித்து-அங்ஙனே இந்தஷோடசமகாசாஸ்திரங்களையுஞ்சொல்லிமுடித்தருளினார் இப்படிஅனந்தமகத்துவங்களைச்செய்து அந்தத்தில் ஸ்ரீகுமார தேவருஞ்சொரூபசாக்ஷாத்கார பரிபூரணநிஷ்டையையடையுஞ்சமயமறிந்துஇரண்டாவது அடிமையாகியவொட்டிசிதம்பரசுவாமிகள் ஸ்ரீகுமாரதேவரைப்பார்த்துசுவாமீதேவர் பரிபூரணமானபின்பு அடியார்கள் தரிசனைஞ்செய்துஉய்யும்பொருட்டு ஓர்திருப்பணிகட்டளையிட்டருளவேண்டுமென்றுவிண்ணப்பஞ்செய்ய, அதற்குஸ்ரீகுமாரதேவர்தாம்செத்தும் நமதுபெயரிருக்கவேண்டுமோவென்றுஅகண்டபரிபூரணசாக்ஷாத்காரசொரூபவியாபகத்திற்கலந்தருளினார். இப்பால்வொட்டிசிதம்பரசுவாமிகளும் ஸ்ரீபெரியநாயகியாருத்தரப்படி - ஸ்ரீகுமாரதேவர்திருநாமத்தினால்கோயில்மடாலயமுதலாகியதுகளுஞ்செய்வித்து, பிறகு தாமுப்பரிபூரணநிஷ்டையையடைந்தருளினார்.

இஃது, ஷை சுவாமிகள் மரபிலுள்ள அடியார்களில் ஒருவரால் சுருக்கமாகத் தெரிந்தெழுதப்பட்டது இரண்டாமுறை விரிவாக அச்சிடப்படும்.

ஸ்ரீகுமாரதேவர்சரித்திரம்-முற்றிற்று.